# மெடிஷீல்டு லைஃப்

## வாழ்நாள் முழுவதும் நல்ல காப்புறுதிப் பாதுகாப்பு



2015 இறுதியிலிருந்து, தற்போது அல்லது ஏற்கனவே நோய்வாய்ப்பட்டிருப்போர் உள்பட அனைத்து சிங்கப்பூர் குடிமக்களுக்கும் நிரந்தர வசிப்பாளர்களுக்கும் மெடிஷீல்டு லைஃப் வாழ்நாள் முழுவதும் நலம்பேணல் காப்பீட்டை வழங்கும். கட்டணத்தைக் கட்டுபடியாகக்கூடியதாகச் செய்ய அரசாங்கம் மானியம் வழங்கும். உங்களிடம் தனியார் காப்புறுதி நிறுவனத்தின் ஒருங்கிணைந்த காப்புறுதித் திட்டம் இருந்தால், இந்த மானியங்கள் அதன் மெடிஷீல்டு லைஃப் பாகத்திற்கும் பொருந்தும்.

- **முதல் நான்கு ஆண்டுகளில் அனைத்து சிங்கப்பூர் குடிமக்களுக்கும் கட்டணம் உயர்வில் 90% வரையிலான இடைக்கால மானியங்கள்**
- **வாழ்நாள் முழுவதும் முன்னோடித் தலைமுறைக்கான மானியங்கள்**
- **குறைவானது முதல் நடுத்தர வருமானம் ஈட்டுவோருக்கு கட்டணம் செலுத்த மானியங்கள்**

யாரும் கட்டணம் கட்டுபடியாகாத காரணத்தால் தங்களது மெடிஷீல்டு லைஃப் காப்புறுதிப் பாதுகாப்பை இழக்கமாட்டார்கள். மானியங்கள் வழங்கிய பிறகும் சந்தாக்களைக் கட்ட இயலாதோருக்கு அரசாங்கம் கட்டணம் செலுத்த கூடுதல் சந்தா ஆதரவை வழங்கும்.

MINISTRY OF HEALTH
SINGAPORE

MediShieldLife

www.medishieldlife.sg